**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C No. 47/2010** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 4** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | கணேசன் | |
| Father / Husband Name | : | ராமநாதன் | |
| Village | : | 941, கீழராஜவீதி, தஞ்சாவூர். | |
| Taluk | : | தஞ்சாவூர் | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | வழக்கறிஞர் | |
| Age | : | 79/2022 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2022**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**<u>C.C No. 47/2010 13.10.2022</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 11.45**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக 1968 ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருகின்றேன். எதிரி ராமலிங்கம் என்பவர் என்னிடத்தில் தஞ்சாவூர் பேங்க் ஆப் இந்தியா பிரதான கிளையில் சொத்துக்களின் பேரில் கடன் பெற விரும்பினார். தஞ்சாவூர் பேங்க் ஆப் இந்தியா பிரதான கிளையின் வழக்கறிஞராக இருப்பதால் என்னிடத்தில் தனது ஆவணங்களுக்கு வங்கிக் கடனுக்கு சட்டக் கருத்துரை கேட்டார். நான் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து அவருக்கு இந்த சொத்துக்களின் மீது

**C.C No. 47/2010   13.10.2022**

கடன் பெற உரிமை உண்டு என சட்டக் கருத்துரை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் 17.12.2004 ம் தேதியிட்ட சட்டக் கருத்துரையின் வங்கி மேலாளரால் சான்றிட்ட நகல் நான் வழங்கியதாகும். (**அந்த சட்டக் கருத்துரை நகல் அ. சா.ஆ.16 ஆக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**) அ.சா.ஆ.16 ல் இரண்டாவது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்யப்படாத உயில் காண்பித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் 17.12.2004 ம் தேதியிட்ட சட்டக் கருத்துரையின் நகல் நான் வழங்கியதாகும். (**அந்த சட்டக் கருத்துரை நகல் அ. சா.ஆ.17 ஆக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது** ) இந்த ஆவணங்கள் வங்கியில் கொடுக்கப்பட்டு எனது சட்டக் கருத்துரை அடிப்படையில் என்னிடம் ஆவணங்களை வழங்கிய எதிரி ராமலிங்கம் அவர்களுக்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் 19.05.2005 ம் தேதியிட்ட சட்டக் கருத்துரையின் வங்கி மேலாளரால் சான்றிட்ட நகல் நான் வழங்கியதாகும். (**அந்த சட்டக் கருத்துரை நகல் அ.சா.ஆ.18 ஆக எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது** ) பின்னர் மாவட்ட குற்றப் பிரிவு காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது மேற்படி பதிவு செய்யப்படாத உயில் போலியாக தயார் செய்யப்பட்ட உயில் என்று வழக்கு பதிவு செய்து இருப்பதாக தெரிவித்தார். மேற்படி உயில் யார் யாருக்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது என்று விபரமாக எனது சட்டக் கருத்துரையில் கூறியுள்ளேன். அதன்பேரில் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**C.C No. 47/2010   13.10.2022**

**எதிரிகள்  தரப்பு குறுக்கு விசாரணை :**

எதிரிகள் தரப்பில் போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யாததால், எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.